ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சியில்

தீரன் மு.சின்னசாமி 47ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி!

அந்தியூர் ப.செல்வராசு, சு.முத்துசாமி கே.இ.பிரகாஷ், எஸ்.எல்.டி. ப. சச்சிதானந்தம் பங்கேற்பு!

ஈரோடு, ஜூலை 31 - ஈரோடு மாவட்டம் ஆப்பக்கூடலில் நடைபெற்ற பொதுகூட்டத்தில் தலைவர் கலைஞர் பேசி கொண்டு இருந்தார் அப்போது திடீரென ஏற்பட்ட பயங்கர இடி, மழையால் மின்சாரம் துண்டிக்கபட்டு மேடை சரிந்து விழுந்த போது தனது உயிரை பொருட்படுத்தாமல் தலைவர் கலைஞரை தோளில் சுமந்து சென்று தலைவர் கலைஞர் உயிரை காப்பாற்றியவர் தீரன் மு.சின்னசாமி அவரது நினைவு நாளை முன் னிட்டு ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம் வெள்ளபெத்தாம் பளையத்தில் அமைந்துள்ள முன்னாள் ஈரோடு மற்றும் மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் தீரன் மு.சின்னசாமி அவர்களின் 47ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி நாளை (1.8.2026 சனிக்கிழமை) காலை 10 மணிக்கு கழக துணை பொதுசெயலாளர் அந்தியூர் ப.செல்வராசு தலைமையில் ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான சு.முத்து சாமி கலந்து கொண்டு நினைவிடத்தில் மரியாதை செலுத்திவிட்டு, சிறப்புரை யாற்ற வுள்ளார்.

நிகழ்ச்சியில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், கழக நெசவாளரணி செயலாளர் எஸ் எல்.டி. ப.சச்சிதானந்தம் உள்ளிட்ட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், ஊராட்சி, வட்ட, கிளை கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள், பொதுமக்கள் ஆகியோர் நினைவேந்தல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

தமிழ்நாட்டில்

சுற்றுலா மேம்பாட்டிற்காக ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

மக்களவையில் ஆ.மணி எம்.பி. கேள்வி!

புதுடெல்லி,ஜூலை,31- தமிழ்நாட்டில் சுற்றுலாத்துறையை மேம்படுத்த ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து, தருமபுரி மக்களவைத் தொகுதி உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி மக்களவையில் ஒன்றிய சுற்றுலாத் துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத்திடம்

கடந்த ஐந்து ஆண்டுகளிலும் நடப்பு ஆண்டிலும் தமிழ்நாட்டிற்கு வருகை தந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை, ஆண்டுவாரியாக எவ்வளவு என்பதையும், அதன் மூலம் மாநிலத்திற்கு கிடைத்த சுற்றுலா வருவாய் விவரங்கள் என்ன?

மேலும், தருமபுரி மாவட்டத்திற்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை, குறிப்பாக ஒகேனக்கல் அருவி உள்ளிட்ட முக்கிய சுற்றுலாத் தலங்களுக்கு ஆண்டுதோறும் எத்தனை பேர் வருகை தந்துள்ளனர் என்ற விவரங்கள் என்ன?

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கத்தில் சுற்றுலாத்துறையின் பங்களிப்பு குறித்து ஒன்றிய அரசு ஆய்வு மேற்கொண்டுள்ளதா?

குறிப்பாக, தருமபுரி மாவட்டத்தில் சுற்றுலாத் துறையால் உருவாக்கப்பட்டுள்ள வேலைவாய்ப்புகள் மற்றும் பொருளாதார வளர்ச்சி தொடர்பான விவரங்கள் என்ன?

அத்துடன், தமிழ்நாட்டில் சுற்றுலாவை ஊக்குவிக்கும் வகையில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு, சுற்றுலா தலங்கள் மேம்பாடு, பாரம்பரிய சுற்றுலா, சுற்றுச்சூழல் (Eco) சுற்றுலா, கடலோர சுற்றுலா, ஆன்மிக சுற்றுலா, விமானம் மற்றும் ரயில் இணைப்பு வசதிகள் விரிவாக்கம், டிஜிட்டல் சுற்றுலா சேவைகள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் குறித்து விளக்கம் அளிக்குமாறும்,தருமபுரி மாவட்டத்தில் அனுமதிக்கப்பட்ட அல்லது செயல்படுத்தப்பட்ட சுற்றுலா மேம்பாட்டு திட்டங்கள், அவற்றின் தற்போதைய நிலை மற்றும் ஒன்றிய அரசு அது குறித்த எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய முழுமையான விவரங்களையும் வெளியிடுமாறு அவர் ஒன்றிய அரசை வலியுறுத்தியுள்ளார்.

த.வெ.க. ஆட்சியில் மும்முனை மின்சாரம் தடைபடுவதால்

கரூர் மாவட்டத்தில் பயிர்கள் கருகி வருகின்றன!

ஆட்சியின் அவலத்திற்கு விவசாயிகள் கண்டனம்!

கரூர். ஜூலை. 31- த.வெ.க ஆட்சியில் மும்முனை மின்சாரம் தடைபடுவதால் கரூர் மாவட்டத்தில் பயிர்கள் கருகி வருகின்றன. ஆட்சியின் இந்த அவலத்திற்கு விவசாயிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

கரூர் மாவட்டத்தில் லாலாபேட்டை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளான கள்ளப்பள்ளி, கருப்பத்தூர், மகாதானபுரம், சிந்தலவாடி, மகிளிப்பட்டி, புனவாசிப்பட்டி, கருப்பத்தூர் சபகுதிகளில் சுமார் 2500 ஏக்கருக்கு மேல் விவசாயிகள் நெல், கரும்பு, வாழை, வெற்றிலை, சோளம் கம்பு உள்ளிட்ட பயிர்களையும் கத்தரிக்காய், வெண்டைக்காய், சுரக்காய், பூசணிக்காய், அவரை, மிளகாய் உள்ளிட்ட காய்கறி வகைகளையும் துவரை, கொள்ளு, உளுந்து உள்ளிட்ட பயிர் வகைகளையும், விரிச்சிப் பூ, சின்னரோஜா, மல்லிகை உள்ளிட்ட மலர் பயிர்களையும் பயிரிட்டு விவசாயம் செய்கின்றனர்.

விவசாயிகள் காவிரி ஆற்றின் கிளை பாசன வாய்க்கால்கள் மூலம் நேரடி பாசன வசதியையும், பல்வேறு மானாவாரி நிலங்கள் நிலத்தடி நீரை நம்பியும் விவசாயம் செய்கின்ற னர்.

இப்பகுதியில் விவசாயிகள் பெரும்பாலும் இலவச மின் இணைப்புகள் பெற்று மும்முனை மின்சாரம் மூலம் ஆழ்துளை கிணற்றிலிருந்து நீரை எடுத்து விளை நிலங்களில் பாய்ச்சி பயிரிட்டு வருகின்றனர். கடந்த திராவிட மாடல் ஆட்சியில் இந்த இலவசம் மின்சாரம் 24 மணி நேரமும் கிடைக்கும் வகையில் இருந்ததால் விவசாயிகள் எந்தவித சிரமமும் இன்றி பயிர்களை பயிரிட்டு விவசாயம் செய்து வந்தனர்.

இந்நிலையில் தவெக அரசு ஆட்சி அமைத்த பின்னர் கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக மும்முனை மின்சாரம் இப்பகுதியில் கிடைக்காமல் அடிக்கடி மின்வெட்டு ஏற்படுகிறது. இது குறித்து புகார் அளித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. புதிதாக மின் இணைப்பு வழங்காத நிலையில் ஏற்கனவே உள்ள இணைப்புகளில் தடையின்றி மின்சாரம் வழங்க பல முறை அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இருந்தும் கண்டுகொள்ளாத போக்கே தொடர்கிறது.

திராவிட மாடல் ஆட்சியில் இதுவரை இல்லாத அளவுக்கு விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்பட்டது. வேளாண்மைக்கான தனி வரவு செலவு திட்ட அறிக்கை தாக்கல் செய்யும் முறை கொண்டுவரப்பட்டது. மின் இணைப்பு குறித்து புகார் செய்ய மகன்னகம் அமைத்து ஒரே எண் வழங்கப்பட்டு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்தது. இவர்கள் புதிதாக எதையும் செய்யத் தேவையில்லை பழைய திட்டங்களைக்கூட செயல்படுத்துவதற்கு, லாயக்கற்ற அரசாக இருக்கிறது என விவசாயிகள் இந்த ஆட்சியின் அவல போக்கிற்க்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

ஒழுங்கு நடவடிக்கை

தலைமைக் கழக அறிவிப்பு!

மும்பை மாநகர் மாநிலக் கழக பொறுப்புக்குழு உறுப்பினர் வே.ம.உத்தமன் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை 600 018.
நாள் :29.07.2026

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.

கேதையுறும்பில் விளையாட்டு மைதானம் அமைக்கும் பணி!

முன்னாள் அமைச்சர் அர.சக்கரபாணி எம்.எல்.ஏ. ஆய்வு!

ஒட்டன்சத்திரம், ஜூலை 31 - திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கேதையுறும்பு ஊராட்சியில் ரூ.25 கோடியில் அமைக்கப்பட்டு வரும் விளையாட்டு மைதானத்தை திண்டுக் கல் மேற்கு மாவட்டச் செயலாளர் அர.சக்கர பாணி எம்.எல்.ஏ. நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து பணிகளை விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

திருச்சியில் உள்ள வெஸ்டரி பள்ளி மைதானத்தில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு பள்ளி மாணவ மாணவிகளுக்கு இடையே நடைபெற்ற பேச்சு போட்டியை அருண் நேரு எம்.பி. தொடங்கி வைத்து வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கி பாராட்டினார். நிகழ்ச்சியில் மாநகர செயலாளர் மேயர் அன்பழகன், வியாபாரிகள் சங்கத் தலைவர் கோவிந்தராஜு, பகுதி செயலாளர் மோகன்தாஸ், சுரேஷ் ,ராஜ்குமார் ,ஆண்ட்ரூஸ், ஜெயராஜ் , குபேந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில்

தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம்

த.வெ.க. அரசுக்கு பெரும் கலக்கத்தை ஏற்படுத்தி உள்ளது!

முன்னாள் சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு அறிக்கை!

நெல்லை, ஜூலை 31 - தி.மு.க.நிர்வாகிகளுக்கு ஒரு இன்னல் என்றால் உடனடியாக களத்தில் இறங்கும் கலைஞர் அவர்கள், மு.க.ஸ்டாலின் அவர்கள் வழியில் சின்ன கலைஞரும் களமிறங்கி துணிச்சலோடு குரல் கொடுப்பதோடு வருகின்ற சட்டமன்ற கூட்டத்தொடரில் த.வெ.க. ஆட்சியில் தொடர்ந்து நடைபெற்று வரும் லஞ்சம், ஊழல், கொலை, கொள்ளை,கற்பழிப்பு தமிழக உரிமைகளை பாதுகாக்க தவறியது போன்றவற்றை சட்டமன்றத்தில் எவ்வாறு விவாதிக்க வேண்டும் என்று தி.மு.க. எம்.எல்.ஏக்களை தயார் படுத்தி வருவது த.வெ.க. அரசுக்கு பெரும் கலக்கத்தை ஏற்படுத்தி உள்ளது என முன்னாள் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் வலைதள பதிவில் கூறியிருப்பதாவது.

MLA கடத்தல்,குதிரை பேரம்,சோபா அன்பளிப்பு மூலம் குறுக்கு வழியில் ஆட்சிக்கு வந்த விஜய் தி.மு.க.



வினரை குறி வைத்து காவல் துறையை ஏவி பொய் வழக்குகள் பதிவு செய்து தொடர் மிரட்டலில் ஈடுபட்டு வருகிறார்.

சட்டமன்ற உறுப்பினர்கள் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், மார்க்கண்டேயன் கைது, செந்தில் பாலாஜி மீது பொய் வழக்கு, GenZ அமைப்பைச் சேர்ந்த இளைஞர்கள் கைது என்று த.வெ.க. அரசின் வெறியாட்டம் தொடரும் போதெல்லாம் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் கடும் கண்டனம் தெரிவிப்பதோடு சட்டபூர்வ நடவடிக்கை எடுத்து கட்சிக்காரர்களை காப்பாற்றி விஜயை ஓட, ஓட விரட்டி வருகின்றனர்.

தி.மு.கவினரால் சின்ன கலைஞர் என்று அன்போடு அழைக்கப்படும் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் காலம் நேரம் பார்க்காமல் பாளையங்கோட்டை சிறைக்கு வந்து மார்க்கண்டேயன் MLA வை சந்தித்து ஆறுதல் கூறியது தி.மு.க. கழக நிர்வாகிகள், தொண்டர்களிடையே பெறும் வரவேற்பையும், உற்சாகத்தையும், எழுச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

கரூரில் நடிகர் விஜயை பார்க்க வந்த ரசிகர்கள், த.வெ.க.தொண்டர்கள் அவர் கண்ணெதிரே செத்து மடிந்த போதும் கண்டு கொள்ளாமல் தனி விமானம் மூலம் சென்னை திரும்பி பனையூர் பங்களாவில் பதுங்கி ஒளிந்ததை போல் தி.மு.க.கழகம் எந்த அடக்குமுறைக்கும் அஞ்சாது என்பதை புரிந்து கொள்ளுங்கள் CMsir ?

தி.மு.க.நிர்வாகிகளுக்கு ஒரு இன்னல் என்றால் உடனடியாக களத்தில் இறங்கும் கலைஞர் அவர்கள், மு.க.ஸ்டாலின் அவர்கள் வழியில் சின்ன கலைஞரும் களம் இறங்கி துணிச்சலோடு குரல் கொடுப்பதோடு வருகின்ற சட்டமன்ற கூட்டத் தொடரில் த.வெ.க. ஆட்சியில் தொடர்ந்து நடைபெற்று வரும் லஞ்ச, ஊழல், கொலை, கொள்ளை, கற்பழிப்பு, தமிழக உரிமைகளை பாதுகாக்க தவறியது போன்றவற்றை சட்டமன்றத்தில் எவ்வாறு விவாதிக்க வேண்டும் என்று தி.மு.கழக எம்.எல்.ஏ.க்களை தயார் படுத்தியும் வருவது த.வெ.க. அரசுக்கு பெரும் கலக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

ஒன்றிய, மாநில அரசுகளின் அடக்கு முறைகளைக் கண்டு அஞ்சாமல் அவர்களது தவறுகளை சுட்டிக்காட்டி, தமிழகத்தின் பெருமையை காப்பாற்றும் தமிழக எதிர்க்கட்சித் தலைவரின் துணிவை பார்த்தாவது செயல்படுவீர்களா CM Sir?

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

தொடர்ந்து வரும் மேற்காசியப் போரினால் ஏற்படும்

பொருளாதாரத் தாக்கங்களைச் சமாளிக்க ஒன்றிய அரசின் நடவடிக்கைகள் ஏதேனும் உள்ளதா?

மாநிலங்களவையில் எஸ்.ஆர்.சிவலிங்கம் கேள்வி!

புதுடெல்லி,ஜூலை.30- திராவிட முன்னேற்றக் கழக மேலவை உறுப்பினர் திரு எஸ். ஆர். சிவலிங்கம் அவர்கள், 28 ஜூலை 2026 அன்று, மாநிலங்களவையில் தொடர்ந்து நீடித்து வரும் மேற்குறிப்பிட்ட போரினால் இந்திய பொருளாதாரத்தில் ஏற்படும் தாக்கங்களை சமாளிக்க ஒன்றிய அரசு ஏதேனும் நடவடிக்கைகளை எடுத்துள்ளதா? என்றும் இறக்குமதி செலவு அதிகரித்துள்ளதை தடுக்க இயலுமா? என்றும் வர்த்தகத் துறை பாதிப்படைந்துள்ளதை அரசின் கவனத்தில் உள்ளதா? என்றும் ஒன்றிய அரசின் நிதித்துறை இணையமைச்சர் திரு பங்கஜ் சௌத்ரி அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.

ஒன்றிய அரசின் நிதித்

துறை இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில் பின்வருமாறு :

இந்தியப் பொருளாதாரச் சந்தை, உலக பொருளாதாரச் சந்தையுடன் இணைந்து செயல்பட்டு வருவதால் இந்திய ரூபாயின் மதிப்பு 8 சதவீதம் அளவிற்கு வீழ்ச்சி அடைந்துள்ளது என்றும் ஆனால் மொத்தப் பொருளாதார உற்பத்தி பெருக்கம் கடந்த 3 ஆண்டுகளில் 7 சதவீத அளவிற்கு வளர்ச்சி அடைந்துள்ளது என்றும் தொழிற்துறை உற்பத்தி 5 சதவீத அளவிற்கு உயர்ந்துள்ளது என்றும் சிறுகுறு தொழில்களுக்கான கடன் வசதிகள் அதிகரித்துள்ளன என்றும் தடையில்லா வர்த்தக ஒப்பந்தங்கள் அதிகரித்துள்ளன என்றும் மாநிலங்களவையில் இணை யமைச்சர் தெரிவித்தார்.

மேலும் அந்நிய செலாவணியை அதிகரிக்க தேவையான அனைத்து முயற்சிகளையும் இந்திய ரிசர்வ் வங்கி எடுத்துள்ளது என்றும் வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் அளிக்கப்பட்டு வருவதாகவும், இந்தோனேஷியா, மாலத் தீவுகள் மற்றும் மொரிஷியஸ் நாடுகளுடன் பல்வேறு வர்த்தக ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றும்,

மேற்காசியப் போரினால் ஏற்பட்ட வர்த்தக இழப்புகளை ஈடுகட்ட இரண்டு இலட்சம் கோடிகளுக்கும் அதிகமான அளவில் கடன் உறுதி திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றும் இந்திய பொருளாதாரம் பெருமளவில் பாதிக்கப்படவில்லை என்றும் ஒன்றிய அரசின் நிதித்துறை இணையமைச்சர் பங்கஜ் சௌத்ரி அவர்கள், மாநிலங்களவையில் தி.மு.க. மேலவை உறுப்பினர் எஸ். ஆர். சிவலிங்கம் கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்

சேத்துமடை பகுதி – இயற்கை விவசாயம் சார்ந்த – வேளாண் - சுற்றுச்சூழல்

சுற்றுலா வாய்ப்புகள் குறித்து அரசு ஏதேனும் ஆய்வு - மதிப்பீட்டை நடத்தியுள்ளதா?

மக்களவையில் கே.ஈஸ்வரசாமி கேள்வி!

புதுடெல்லி, ஜூலை. 31- தமிழ்நாட்டின் பொள்ளாச்சி சேத்துமடை பகுதி மற்றும் உத்தரப் பிரதேசத்தில் (குறிப்பாக புந்தேல்கண்ட் பகுதியில்) இயற்கை விவசாயம் சார்ந்த மற்றும் வேளாண் சுற்றுச்சூழல் சுற்றுலா (agro eco tourism) ஆகியவற்றிற்கான வாய்ப்புகள் குறித்து அரசு ஏதேனும் ஆய்வு அல்லது மதிப்பீட்டை நடத்தியுள்ளதா அல்லது அதற்கான முன்மொழிவை வைத்துள்ளதா?,

இத்தகைய முயற்சிகளுக்கு 'சுதேஷ் தர்ஷன் 2.0' (Swadesh Darshan 2.0),

'தேகோ அப்னா தேஷ்' (Dekho Apna Desh), கிராமப்புற சுற்றுலா முயற்சிகள் அல்லது பிற மத்தியத் துறைத் திட்டங்களின் கீழ் ஆதரவளிக்க முன்மொழியப்பட்டுள்ளதா, அவ்வாறெனில், அதுகுறித்த விவரங்கள் என்ன?,

உள்கட்டமைப்பு, பயண வழியிலான வசதிகள், விளக்க மையங்கள் (interpretation centres), டிஜிட்டல் விளம்பரம் மற்றும் சந்தைப்படுத்தல் ஆதரவு உள்ளிட்ட, இயற்கை விவசாயம் சார்ந்த சுற்றுலாச் சுற்றுகளை (tourism circuits) அப்பகுதிகளில் மேம்படுத்துவதற்கு அரசு நிதி ஒதுக்கியுள்ளதா அல்லது ஒதுக்க முன்மொழிந்துள்ளதா?, அப்பகுதிகளில் நிலையான வேளாண் சுற்றுச்சூழல் அமைப்புகளை (agrotourism ecosystems) உருவாக்குவதில் விவசாயிகள், சுயஉதவிக் குழுக்கள் மற்றும் உள்ளூர் இளைஞர்களுக்கு ஆதரவளிக்க முன்மொழியப்பட்டுள்ள பயிற்சி, திறன் மேம்பாடு, நிதி ஊக்கத்தொகைகள் அல்லது பொதுதனியார் கூட்டாண்மை மாதிரிகள் குறித்த விவரங்கள் என்ன?

இதுபற்றி சுற்றுலாத் துறை அமைச்சர் பின் வருவனவற்றைத் தெரிவிப்பாரா என பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி கேள்வி எழுப்பினார்.

திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், திருவெறும்பூர் தொகுதிக்குட்பட்ட துவாக்குடி நகர, வட்டக் கழக நிர்வாகிகள் சந்திப்பு மற்றும் கழக ஆக்கப் பணிகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு முன்னாள் அமைச்சரும், திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமை வகித்தார். கூட்டத்தில், கழக வளர்ச்சி, பணிகள், கழகத்தை வலுப்படுத்துவது, மக்களுடனான தொடர்பை மேம்படுத்துவது உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து கழக நிர்வாகிகளுடன் விரிவான ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. மேலும், நிர்வாகிகள் தங்களது கருத்துகள் மற்றும் ஆலோசனைகளையும் பகிர்ந்து கொண்டனர். இந்நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர் சேகரன், துவாக்குடி நகரக் கழகச் செயலாளர் காயாம்பு மற்றும் வட்ட கிளைக் கழகச் செயலாளர்கள், கழக நிர்வாகிகள், பி.எல்.ஏ.2 உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.